வாழ் மக்களால் சொல்லப்பட்டும் இதுகாறும் அது நிறைவேற்றப் படவில்லை. அதன் மீது உடனடி நடவடிக்கைகள் எடுப்பதற்கு அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. உப்பார் ஓடைத்திட்டம் மதிப்பீடு ரூ. 5.64 இலட்சம். பெரியபள்ளத்திட்டம் ரூ. 7.55 இலட்சம். சிக்கன மற்றவையாயிருந்தும் பின்தங்கின வட்டாரத்திலிருப்பதால் தனிவகை யாக எடுத்துக்கொள்ளும்படி மேற்படி கூறிய எண்ணில் பரிந்துரைக் கப்பட்டுள்ளன.

வட்டமலைக்கரை ஓடையில் நீர்த் தேக்கம்.

*561 வின.—திரு. மு. பழனிசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடை யளிப்பாரா—

வெள்ளக்கோவில் தொகுதி நாகமநாயக்கன்பட்டி ஊராட்சி யைச் சேர்ந்த சடையபாளையத்துக்கு பக்கத்தில், வட்டமலைக்கரை என்ற ஓடையில் நீர்த் தேக்கம் கட்டி பாசன வசதி செய்து தர அரசு ஏதேனும் திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : ஆம். இத்திட்டம் நீர்ப்பாசன தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மு பழனிசாமி : இத்திட்டம் கடந்த நான்கு ஆண்டு காலமாக ஆய்வு செய்யப்பட்டு, அது தலைமைப் பொறியாளரிடம் இருப்பதாகக் கூறுகிறார்கள். அத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் வறண்ட பகுதியான வெள்ளக்கோவில் வட்டாரத்தில் சுமார் மூவா யிரம் ஏக்கர் அளவிற்கு பாசனவசதி கிடைக்கும் என்று எதிர்பார்க் கிறார்கள். ஆகவே இத்திட்டத்தை விரைவில் நிறைவேற்றித் தரு வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல் 3,000 ஏக்கர் பாசனவசதி கிடைக்கும். உத்தமபாளையம், இலக்கமநாய்க்கன்பட்டி, வெள்ளக்கோவில் ஆகிய கிராமங்களில் உள்ள நிலங்கள் சாகுபடி வசதி பெறும். இதன் மதிப்பீடு எழுபது லட்சம் ரூபாய். 25 லட்சம் என்றாலே மத்திய அரசின் அனுமதி பெறவேண்டியிருக்கிறது.